TNVR070012622025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 29 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 82/2025**

C.N.R.No.TNVR070012622025

------

1) கருப்பசாமி
2) வெங்கடேஷ் .. வாதிகள்

/எதிர் /

1) து. கௌரிகல்யாணி
2) து. ஜெயராணி
3) சந்திரலேகா .. பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இறுதியாக என் முன்பாக 20.07.2026 அன்று விசாரணைக்காக வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பா. கண்ணன், அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். மைக்கேல் பாரதி அவர்கள் ஆஜராகியும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 3 ம் பிரதிவாதிக்கு பத்திரிக்கை விளம்பரம் செய்தும், ஆஜராகாத காரணத்தினாலும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக இருந்து வரும் நிலையிலும், வாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

இந்த வழக்கானது பிராது தபசில் சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை 3 ம் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ, எவ்வித இன்னலோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று வாதிகளுக்கு ஆதரவாக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க உத்தரவிட வேண்டியும், 1, 2 பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதியின் கணவர் ரகுபதி மீது தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.139/2009–ல்

02.03.2010–ம் தேதியில் தபசில் சொத்தை பொறுத்து மட்டும் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் வாதிகள் தரப்பினர்களாக இல்லை என்பதால் அது இவ்வாதிகளை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்ய உத்தரவிட வேண்டியும், இவ்வழக்கின் செலவுத் தொகை வேண்டியும் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்–</u>**

**2.1.** பிராது தபசில் சொத்து என்பது சர்வே எண்.44/3–ல் கண்ட சுமார் 4.63 ஏக்கர் நிலமாகும். பிராது தபசில் சொத்தும், வேறு பல சொத்துக்களும் ஆதியில் சீனிநாயக்கர் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக இருந்துள்ளது. மேற்படி சீனி நாயக்கர் – சுப்பம்மாளுக்கு துளிராஜ், பாலசுப்பிரமணியன் ஆகிய இரண்டு மக்கள் உள்ளனர். இந்நிலையில் சீனி நாயக்கர் 1974 ம் வருடத்தில் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டார். பிராது தபசில் சொத்துக்களை சீனி நாயக்கரின் மனைவி மற்றும் அவரது ஆண் மக்களும் அடைந்து அதன்பின் கடந்த 07.07.1992 ம் தேதியில் ஆவண எண்.1724/1992 ன் மூலம் பதிவு பாகப்பத்திரம் மூலம் பாகம் செய்து கொண்டார்கள்.

2.2. மேற்படி பாக பத்திரத்தில் பிராது தபசில் சொத்தும், வேறு சில சொத்துக்களும் மேற்படி சுப்பம்மாள் ஆயுள் வரை அனுபவித்து வந்து, அதன்பின் மேற்படி துளிசிராஜ் பாகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன்படி மேற்படி சுப்பம்மாள் 06.05.1999 ம் தேதியில் காலமாகிவிட்ட பின்பு பிராது தபசில் சொத்தை மேற்படி துளசிராஜ் பெற்று அனுபவம் செய்து வந்துள்ளார். மேற்படி துளசிராஜ் அவ்வாறு அனுபவம் செய்து வந்த நிலையில் பிராது தபசில் சொத்தையும் மற்ற சொத்துக்களையும் பொறுத்து துளசிராஜின் குமாரரான ரகுபதிக்கு 19.07.2005 ம் தேதியில் ரிஜிஸ்டர் தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.3498/2005–ன் படி பதிவு தானபத்திரம் எழுதிக் கொடுத்து, மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ரகுபதி வசம் ஒப்படைத்துவிட்டார்.

2.3. மேற்படி ரகுபதி தானத்தை ஏற்றுக்கொண்டு தபசில் சொத்தை 23.06.2006 ம் தேதியன்று ஆவண எண்.4003/2006–ன் படி முருகன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார். அதன்பின்பு மேற்படி முருகன் தபசில் சொத்தை தன்னுடைய குமாரர் கார்த்திக் விக்னேஷ்க்கு 08.09.2010 ம் தேதியன்று ஆவண எண்.7964/2010–ன் படி தானப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி தானத்தை ஏற்றுக்கொண்ட கார்த்திக் விக்னேஷ் பிராது தபசில் சொத்தை 02.08.2012 ம் தேதி கிரைய பத்திர ஆவண எண்.7271/2012–ன் படி வாதிகளுக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார். அவ்வாறு கிரையம் பெற்ற வாதிகள் தபசில் சொத்திற்கு பட்டா தங்கள் பெயருக்கு மாற்றி அது முதல் தபசில் சொத்தை யாருடைய இன்னலும், இடைஞ்சலும் இன்றி இன்று வரை அனுபவித்து வருகின்றார்கள்.

2.4. இந்நிலையில், கடந்த 29.04.2025 ம் தேதி வாதிகள் தபசில் சொத்தை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற வேண்டுமென்ற நோக்கத்தில் கணினி மூலம் வில்லங்கச்சான்றிதழ் எடுத்து பார்த்தபோது மேற்படி துளசிராஜின் பெண் மக்களான 1, 2 பிரதிவாதிகள் தங்கள் தகப்பனார் துளசிராஜ் கடந்த 18.09.2005 ம் தேதியில் காலமான பின் தங்கள் சகோதரர் ரகுபதி மீது மட்டும் அ.வ.எண்.139/2009 தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. மேற்படி வழக்கில் தங்கள் தகப்பனார் துளசிராஜ் தபசில் சொத்தையும் இதர சொத்துக்களையும் பொறுத்தும் தன்னுடைய குமாரர் ரகுபதிக்கு 19.07.2005 ம் தேதியில் எழுதிக் கொடுத்த தானப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யக்கோரி மேற்படி வழக்கானது 22.10.2009 ம் தேதியன்று தாக்கல் செய்துள்ள விவரம் தெரிய வந்துள்ளது. மேற்படி வழக்கில் ரகுபதி ஆஜராகாததால் வழக்கு 02.03.2010 ம் தேதியன்று 1, 2 பிரதிவாதிகளுக்கு சாதகமாக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகியுள்ளது.

2.5. மேற்படி தீர்ப்பின்படி துளசிராஜ் தன்னுடைய குமாரர் ரகுபதிக்கு தபசில் சொத்து உட்பட மற்ற சொத்துக்களையும் சேர்த்து எழுதிக் கொடுத்த மேற்படி தானம்

சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யப்பட்டுள்ளது. அதன்பின்பு ரகுபதி 28.01.2015ம் தேதியன்று தனது மனைவியான 3ம் பிரதிவாதியை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேற்படி ரகுபதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் வேறு ஆண், பெண் வாரிசுகள் யாரும் கிடையாது. மேற்படி அ.வ.எண்.139/2009ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைத்து மேற்படி விபரம் 19.07.2005ம் தேதிய தானபத்திரம் வில்லங்கத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

2.6. அதன்பின்பு 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதி மீது தங்கள் கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்து உட்பட அனைத்து சொத்துக்கள் சம்மந்தமாகவும், பாகம் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.96/2015 தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கில் 3ம் பிரதிவாதி ஆஜராகவில்லை. மேற்படி வழக்கில் 02.06.2017ம் தேதியில் முதல் நிலை தீர்ப்பாணை பகரப்பட்டது. மேற்படி முதல் நிலை தீர்ப்பாணையில் அனைத்து சொத்துக்களிலும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா பிரிவினையில்லாத 3ல் 1 பங்குள்ளது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி முதல் நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதி மீது தபசில் சொத்து உட்பட அனைத்து சொத்துக்களிலும் பாகம் பிரிக்கக் கோரி இ.ம.எண்.592/2017 தாக்கல் செய்து மேற்படி மனுவில் 28.02.2019ம் தேதியில் இறுதிநிலை தீர்ப்பாணைபடி பிராது தபசில் சொத்தை ஏற்கனவே தங்களது தகப்பனார் துளசிராஜ் தங்களது சகோதரர் ரகுபதிக்கு 19.07.2005ம் தேதியில் தானம் எழுதிக் கொடுத்துள்ளதால் தபசில் சொத்து 3ம் பிரதிவாதி பாகத்திற்கே இறுதிநிலை தீர்ப்பாணையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

2.7. மேற்படி வழக்கிலேயே 1, 2 பிரதிவாதிகள் தபசில் சொத்து துளிசிராஜ், ரகுபதிக்கு எழுதிக் கொடுத்துள்ள தானத்தின் அடிப்படையில் தான் பிராது தபசில் சொத்தை 3ம் பிரதிவாதி பாகத்திற்கு ஒதுக்கியுள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகள் தங்களது சகோதரர் ரகுபதி மீது அ.வ.எண்.139/2009–யை 22.10.2009ம் தேதியன்று தான்

தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கில் தபசில் சொத்து அதன் சொத்து விபரத்தில் 8 வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முன்பே தபசில் சொத்தை தானம் பெற்ற ரகுபதி 21.06.2006 ம் தேதியன்றே முருகன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பிராது தபசில் சொத்து மேற்படி ரகுபதிக்கு பாத்தியப்பட்டதல்ல. வழக்கு தாக்கல் செய்யும்போது தபசில் சொத்து வாதிகளுக்கு கிரையம் கொடுத்த முன்பாத்தியஸ்தரான முருகன் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். எனவே மேற்படி முருகனை அ.வ.எண்.139/2009 வழக்கில் கட்சிக்காரராக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

2.8. பிராது தபசில் சொத்தைப் பொறுத்து மேற்படி வழக்கின் தீர்ப்பு உண்மைகளை மறைத்து 1, 2 பிரதிவாதிகளும், அவரது சகோதரர் ரகுபதிராஜையும் Collude செய்து தபசில் சொத்தை கிரையம் பெற்ற முருகனை மோசடி செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மோசடியாக முருகனை கட்சியாக சேர்க்காமல் பெறப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பு என்பதால் தபசில் சொத்தை பொறுத்து மேற்படி தீர்ப்பு இவ்வாதிகளை கட்டுப்படுத்தாது. மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பினர்களாக இல்லை. அதன்பின்பு நடைபெற்ற அ.வ.எண்.96/2015 மற்றும் இ.ம.எண்.592/2017–ல் பிராது தபசில் சொத்தை மேற்படி ரகுபதியின் மனைவி 3 ம் பிரதிவாதிக்கே மேற்படி பாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. 3 ம் பிரதிவாதி தபசில் சொத்தை தனது கணவர் ரகுபதி 18.09.2005 ம் தேதியில் காலமான பின் வாரிசு உடமையில் தான் உரிமை கோர இயலும்.

2.9. எனவே சொத்து மாற்றுச் சட்டம் பிரிவு 41–ன் படி ஒரு கால் மேற்படி ரகுபதிக்கு தபசில் சொத்தை தங்களது தகப்பனார் துளசிராஜ் 19.07.2005–ல் எழுதி வைத்த தானம் 1, 2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும் மேற்படி அ.வ.எண்.96/2015 மற்றும் இ.ம.எண்.592/2017 ன் படி அவரது மனைவியான 3 ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்து

முழுவதும் ஒதுக்கப்பட்டு மேற்படியாருக்கு பாத்தியம் ஏற்பட்டுள்ளதால் மேற்படி முருகன் பெற்ற மேற்படி கிரையம் சட்டப்படி செல்லும் என்றும், அதன்படி தபசில் சொத்தை வாதிகள் கிரையம் பெற்றுள்ளதால் வாதிகளுக்கே பாத்தியப்பட்டது என்றே சட்டப்படி கருதப்பட வேண்டும். எனவே தற்போது தபசில் சொத்தில் வாதிகள் உரிமை மீது எவ்வித cloud–யும் இல்லை. 3ம் பிரதிவாதி அ.வ.எண்.96/2015ன் தீர்ப்பை வைத்துக் கொண்டு வாதிகளிடம் ஏதாவது தொகை பெற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 10.07.2025ம் தேதி முதல் தபசில் சொத்தினை வாதிகள் அனுபவம் செய்து வருவதை மட்டும் இடைஞ்சல் செய்து வருகின்றார். வாதிகள் 3ம் பிரதிவாதியின் செயலை தடுத்து நிறுத்திவிட்டார்கள். 3ம் பிரதிவாதி, வாதிகளின் அனுபவத்தை எந்நேரமும் இடைஞ்சல் செய்ய தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றார். எனவே வழக்கு தாக்கல்.

**3.** 1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், 3ம் பிரதிவாதி பத்திரிக்கை விளம்பரம் செய்தும் ஆஜராகாத காரணத்தினாலும் தோன்றாத் தரப்பினராக இருந்து வருகிறார்கள்.

4. **சாட்சிகள்**

வாதிகள் தரப்பில் வா.சா.1 மட்டும் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** இந்த வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதே தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

6. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் –**

1. அ.வ.எண்: 139/2009–ல் பெறப்பட்ட 02.03.2010 தேதியிட்ட ஒருதலைப்பட்சத் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதிகளையும் அவர்தம் சொத்து உரிமையையும் கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்ய வாதிக்கு உரிமையுள்ளதா?
2. 3–ஆம் பிரதிவாதி வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்வதைத் தடுக்கும் வகையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதிகளுக்கு உரிமையுள்ளதா?

3. வாதிகளுக்குக் கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?

7. **<u>தீர்வுக்கான காரணிகள்</u>**

7.1. வா.சா.ஆ.3–ன் படி, ரகுபதி 21.06.2006 அன்றே தாவா சொத்தை முருகன் என்பவருக்கு விற்றுவிட்டார். ஆனால் 1, 2 பிரதிவாதிகள் அ.வ.எண்.139/2009 வழக்கை 22.10.2009 அன்று தாக்கல் செய்துள்ளனர். வழக்கு தாக்கல் செய்த தேதியில் சொத்தின் உண்மையான உரிமையாளராக இருந்த முருகனையோ அல்லது அவரது வழிவந்தவர்களையோ அவ்வழக்கில் கட்சிக்காரராகச் சேர்க்கவில்லை. இதற்குரிய காரணங்களை பிரதிவாதிகள் இவ்வழக்கில் கட்சி செய்து எடுத்துரைக்கவில்லை.

7.2. பாரதிய சாக்ஷ்ய அதினியம் பிரிவு 38–ன் படி மோசடி அல்லது மறைமுகமான கூட்டுக்களவு மூலம் பெறப்பட்ட தீர்ப்பு செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிட்டுள்ளது. மேற்கூறிய சங்கதியை எதிர்த்து எதிர்தரப்பு வழக்காடி நிரூபிக்கவில்லை. மேலும், 1908–ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 1 விதி 10–ன் கீழ், சொத்தின் உரிமையாளரைச் சேர்க்காமல் பெறப்பட்ட ஒருதலைப்பட்சத் தீர்ப்பு, வழக்கின் தரப்பினராக இல்லாத நபரையும் அவரது நல்லெண்ணக் கிரையதாரர்களையும் சட்டப்படி கட்டுப்படுத்தாது என்று பல்வேறு தீர்ப்புகளில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் எடுத்துரைத்துள்ளது.

7.3. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 (பாக வழக்கு அ.வ.எண்: 96/2015) ஆவணங்களின்படி, 1, 2 பிரதிவாதிகள் தொடர்ந்த பாக வழக்கின் இறுதித் தீர்ப்பாணையில் இத்தாவா சொத்து முழுவதும் 3–ஆம் பிரதிவாதியான ரகுபதியின் மனைவிக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, ரகுபதியின் மூலமாக உரிமையைப் பெற்ற முருகன் மற்றும் கார்த்திக் விக்னேஷ் வழியே வாதிகள் பெற்ற வா.சா.ஆ.5 கிரையப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது.

7.4. எனவே, அ.வ.எண்: 139/2009–ல் பெறப்பட்ட 02.03.2010 தேதியிட்ட தீர்ப்பு வாதிகளையும் தாவா சொத்தையும் கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்ய

வாதிக்கு முழு உரிமை உள்ளது என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7.5. அனுபவ உரிமை: குறித்து பரிசீலிக்கையில் வா.சா.ஆ.5 (கிரையப் பத்திரம்) மற்றும் வா.சா.ஆ.11 (தீர்வை ரசீது) ஆகியவற்றின் மூலம் வாதிகள் தாவா சொத்தை வாங்கி, பட்டா மாற்றம் செய்து, தீர்வை செலுத்தி சட்டப்பூர்வமாக அமைதியான முறையில் அனுபவித்து வருவது நிரூபணமாகிறது. இது குறித்தும் பிரதிவாதிகள் கட்சி செய்து இவ்வழக்கை முன்னெடுத்து செல்லாததால் அனுபவம் வாதியிடம் உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.6. வாதிகளின் சட்டப்பூர்வமான அனுபவ உரிமையில் தலையிட 3–ஆம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. 3–ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்யாததாலும், வாதிகளின் சாட்சியம் மறுக்கப்படாமல் உறுதியாக உள்ளதாலும், வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என 3–ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்குவது நீதியின் பாற்பட்டதாகும். எனவே வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என தீர்வு காண்கிறது.

**7. <u>இறுதி முடிவு –</u>**

இறுதியாக, வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, அ.வ.எண்: 139/2009–ல் பெறப்பட்ட 02.03.2010 தேதியில் தபசில் சொத்தை மட்டும் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதிகளையும் அவர்தம் சொத்து உரிமையையும் கட்டுப்படுத்தாது என விளம்புகை பரிகாரம் வழங்கியும், 3–ம் பிரதிவாதி, வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்வதைத் தடுக்கும் வகையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை பற்றி உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் நாள்

இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்–**

**வாதிகள் தரப்பு சாட்சி**

வா.சா.1 – கருப்பசாமி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 07.07.1992 | சுப்பம்மாள், துளசிராஜ், பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவண எண்.1724/1992 ன் சார்பதிவாளர் நகல். |
| வா.சா.ஆ.2 | 19.07.2005 | துளசிராஜ், ரகுபதிக்கு எழுதிக் கொடுத்த தானெசெட்டில்மெண்ட் பத்திர ஆவண எண்.3498/2005 ன் சார்பதிவாளர் நகல். |
| வா.சா.ஆ.3 | 21.06.2006 | ரகுபதி, முருகனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் அசல். |
| வா.சா.ஆ.4 | 08.09.2010 | முருகன், கார்த்திவிக்னேஷ்க்கு எழுதிக் கொடுத்த தானபத்திர ஆவண எண்.7964/2010 ன் சார்பதிவாளர் நகல். |
| வா.சா.ஆ.5 | 02.08.2012 | வாதிகள், கார்த்தி விக்னேஷ்க்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திர ஆவண எண்.7271/2012 அசல் |
| வா.சா.ஆ.6 | 29.04.2025 | வில்லங்கச் சான்றிதழ் கணினி நகல். |
| வா.சா.ஆ.7 | | சாத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திதல் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.139/2009 பிராதின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.8 | 02.03.2010 | அ.வ.எண்.139/2009 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.9 | 07.06.2017 | அ.வ.எண்.96/2015–ன் முதல்நிலை தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.10 | 28.02.2019 | அ.வ.எண்.96/2015–க்கான இறுதிநிலை தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.11 | 04.02.2025 | 1ம் வாதி கருப்பசாமி பெயரிலுள்ள தீர்வை ரசீது அசல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்–</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
அ.வ.எண்.82/2025
நேரிய/வரைவு
தீர்ப்புரை
நாள் –29.07.2026.